**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**C.C. No. 184/2015**
**வழக்கு சாட்சி – அ.சா. 2 – திரு. ராஜேந்திரன்.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.12.2025.

**(எதிரி V.C. மூலமாக ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**குறுக்கு விசாரணை:-**

எலுமிச்சம் பழக் கடை எந்த இடத்தில் உள்ளது என்றால், பெரியகுளம் ரோட்டில் கிழக்குப் பார்த்து உள்ளது. நான் எந்த திசையைப் பார்த்து எலுமிச்சம்பழம் வாங்கிக்கொண்டிருந்தேன் என்றால், மேற்கு திசையப் பார்த்து எலுமிச்சம்பழம் வாங்கிக் கொண்டிருந்தேன். இறந்துபோன நபர், என்னைப் பார்த்து பேசிவிட்டுதான் அதன்பின்னர் சென்றார் என்றால், சரிதான். இருசக்கர வாகனத்தில் எத்தனை பேர்கள் சென்றார்கள் என்றால், இறந்த நபரும், அவரது மனைவியும் சென்றார்கள். விபத்து நடந்த இடம் 4 ரோடு என்றால், சரிதான். சம்பவம் நடந்தவுடன் எவ்வளவு நேரம் கழித்து போலீசார் வந்தார்கள் என்றால், சம்பவம் நடந்து 5 நிமிடத்திற்குள் வந்துவிட்டார்கள். விபத்து எத்தனை மணிக்கு நடந்தது என்றால், 02.45 மணிக்கு நடந்தது. சம்பவ இடத்தில் போலீசார் ஏதும் விசாரித்து, வாக்குமூலம் எழுதி வாங்கினார்களா? என்றால் அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் ஆம்புலன்சில் சென்றேனா? என்றால், இல்லை. பின்னால், ஆட்டோவில் சென்றேன். என்னுடன் யார், யார் வந்தார்கள் என்றால், 10 பேர்கள் சென்றிருப்போம். சம்பவத்தை நான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றால், சரியல்ல. சம்பவம் எனக்குப் பின்னாடி கிழக்குப் பக்கத்தில் நடந்தது என்றால், சரிதான். தேனி to பெரியகுளம் ரோட்டில் மதுரை செல்லும் வழியில் பேரிகார்டு உள்ளது என்றால், சரிதான். இறந்த நபர்களை எந்த ஆம்புலன்சில் ஏற்றிச் சென்றார்கள் என்றால், தனியார் ஆம்புலன்சில் ஏற்றிச் சென்றார்கள். சம்பவ சமயத்தில் என்னுடன் யார், யார் இருந்தார்கள் என்றால், என் தம்பி செல்லப்பாண்டி இருந்தார். மருத்துவமனையில் யார், யார் இருந்தோம் என்றால், எனது ஊரைச் சேர்ந்த நிறைய பேர் இருந்தோம். மருத்துவமனைக்குப் போலீசார் வந்தார்களா? என்றால், வந்தார்கள். எத்தனை மணியிருக்கும் என்றால், 04.30 மணியிருக்கும். போலீசார் விபத்து குறித்து,

மருத்துவமனையில் என்னிடமோ, எனது தம்பியிடமோ எழுதி வாங்கினார்களா? என்றால், எழுதிவாங்கவில்லை. எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்றால், இரவு சுமார் 7 மணி இருக்கும். எனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா? என்றால், கையெழுத்து மட்டும் போடத் தெரியும். எழுதப் படிக்கத் தெரியாது. எனது தம்பி செல்லப்பாண்டிக்கு எழுதப் படிக்கத் தெரியுமா? என்றால், தெரியும். அ.சா.ஆ.1 ஆன புகாரை யார் எழுதினார்கள் என்றால், என் தம்பி செல்லப்பாண்டிதான் எழுதினார். மேற்படி புகாரில், நான் சாட்சிக் கையெழுத்துப் போட்டுள்ளேனா? என்றால், எனக்கு ஞாபகமில்லை. தற்போது, என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 ஆன புகாரில் உள்ள சாட்சிக் கையெழுத்து என்னடையதா? என்றால், இல்லை. கோடாங்கிபட்டியில், மொட்டையன் என்ற நபருக்கு எத்தனை மகன்கள் என்றால், இருவர் உள்ளார். சம்பவம் நடந்த அன்று என்ன கிழமை என்றால், கிழமை தெரியாது, ஆனால், அன்று காந்திஜெயந்தி ஆகும். நான் சொன்னதுபோல், சொன்ன தேதியில், நான் சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும், விபத்தில் இறந்தவர் எனது தம்பி என்பதால், நான் அவருக்கு ஆதரவாக, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்தவர் எனது தம்பியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநபர் பெயர் தெரியுமா? என்றால் அவரது பெயர் சதீஸ். எவ்வளவு வேகத்தில் வானத்தை ஓட்டி வந்தார் என்றால், மணிக்கு 70 கிலோ மீட்டர் வேகத்தில் வந்தார். அந்த இடத்தில் சிக்னல் இருப்பதால், 70 கிலோ மீட்டர் வேகத்தில் வந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும், அன்று வாரச் சந்தை என்பதாலும், அவ்வளவு வேகத்தில் வந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2025.12.03 19:07:11 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**